**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்து திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ் பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண நிதி உதவித் தொகையினை ரூபாய் 25,000/–லிருந்து ரூபாய் 50,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.24 நாள்:28–06–2011

ஆனி 13, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தேர்தல் அறிக்கை 2011.
2. அரசாணை (நிலை) எண்: 43, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 17.05.2011.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண்: 1104/மஇக(1)/2011, நாள் 26.5.2011.

——————

**<u>ஆணை:</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2011 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் தற்போது வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் தெகை ரூ.25,000/–உடன் தங்கத்தின் விலை உயர்வை கருத்தில் கொண்டு 4 கிராம் ( ½ சவரன்) தங்கம் மணப்பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய இலவசமாக வழங்கப்படும் என்றும் மற்றும் இளங்கலை பட்டம் அல்லது டிப்ளமோ பட்டம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.50,000/–மும், அதனுடன் 4 கிராம் தங்கம் திருமாங்கல்யம் செய்ய இலவசமாக வழங்கப்படும் எனவும் அறிவிப்புச் செய்தார்கள்.

2. மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் சமூக நலத் துறையின் பல்வேறு திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ் பட்டயம் மற்றும் இளங்கலை பட்டப்படிப்பு படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.50,000/–மும் அதனுடன் திருமாங்கல்யம் செய்வதற்காக ஒரு பயனாளிக்கு 4 கிராம் தங்கம் (22 காரட்) இலவசமாக வழங்கப்படுமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதி உதவித் தொகை 4 வகையான திட்டங்களின் கீழ் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்:

(1) பார்வையற்றோரை நல்ல நிலையில் உள்ள நபர் திருமணம் செய்துகொள்வது.

(2) காதுகேளாதோரை மற்றும் வாய்பேசாதோரை நல்ல நிலையில் உள்ள நபர் திருமணம் செய்துகொள்வது.

(3) கை அல்லது கால் இழந்தோரை நல்ல நிலையில் உள்ள நபர் திருமணம் செய்துகொள்வது.

(4) மாற்றுத் திறனாளிகளை மாற்றுத் திறனாளிகள் திருமணம் செய்துகொள்ளுவது.

4. மேலும், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது போலவே மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதி உதவியினையும் உயர்த்தி வழங்கினால், மாற்றுத் திறனாளிகளை திருமணம் புரிய வரும் நபர்களை ஊக்குவிப்பதாக இருக்கும் என்றும் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்ளவும் ஏதுவாக இருக்கும் என்றும், திருமண உதவித் தொகையை ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்பட்சத்தில் ரூ.25,000/–ம் ரொக்கப் பணமாகவும் ரூ.25,000/– தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கலாம் என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த அரசு அதனை ஏற்று மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களின் கீழ் பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கவும் இதனுடன் மணப்பெண்ணிற்கு ஒரு திருமாங்கல்யம் செய்ய நான்கு கிராம் தங்கம் (1/2 சவரன்) 22 காரட் இலவசமாக வழங்கவும் மற்றும் இச்செலவினத்தை மேற்கொள்ள ரூ.66,70,520/–க்கு (ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து எழுபதாயிரத்து ஐநூற்றி இருபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மற்றும் 2011–12 ம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவு திட்டத்தில் சம்மந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் நடைமுறையில் உள்ள திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.47,50,000/–ஐ (ரூபாய் நாற்பத்தியேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) செலவிட அனுமதித்தும் இத்தொகையினை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கு ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. தற்பொழுது வழங்கப்படவிருக்கும் திருமண உதவித் தொகை ரூ.50,000/–னை ரூ.25,000/– ரொக்கப் பணமாகவும், மீதமுள்ள ரூ.25,000/–னை தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கவும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இச்சலுகை ஒரு குடும்பத்தில் ஒரு பெண் பயனாளிக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதனை பின்பற்றுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(அ) பார்வையற்றோரை திருமணம் செய்துக் கொள்ளும் பார்வை உள்ளவர்களுக்கு சலுகைகள் வழங்கும் திட்டம் (40 நபர்கள்) (ரூ.14,04,320/–)

2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02, சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – KL பார்வையற்றோரைத் திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகைகள்–09. உதவித் தொகை. –03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(த.தொ.கு 2235 02 101 KL 0934)

(ஆ) காது கேளாதோரை திருமணம் செய்துக் கொள்ளும் சாதாரண நபர்களுக்கு சலுகைகள் வழங்கும் திட்டம் (55 நபர்கள்) ரூ.19,30,940/–

2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02, சமூக நலன்– 101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – LM வாய்பேசாத மற்றும் காது கேளாதவர்களை திருமணம் செய்யும் முன் வரும் குறைபாடற்றவர்களுக்கு சலுகைகள்–09. உதவித் தொகை– 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(து.தொ.கு 2235 02 101 LM0931)

(இ) ஒரு கை அல்லது ஒரு கால் இழந்தோரை திருமணம் செய்துக் கொள்ளும் சாதாரண நபர்களுக்கு சலுகைகள் வழங்கும் திட்டம் (55 நபர்கள்) (ரூ.19,30,940/–)

2235 சமூக பாதுகாப்பும் நலனும்– 02. சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம் –LJ. மாற்றுத் திறனாளிகளை மணந்து கொள்ளும் குறைபாடற்றவர்களுக்கு சலுகை– 09. உதவித் தொகை –03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை .
(து.தொ.கு 2235 02 101 LJ 0937)

(ஈ) மாற்றுத் திறனாளிகளை திருமணம் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகைகள் வழங்கும் திட்டம் (40 நபர்கள்) (ரூ.14,04,320/–)

2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன்–101. மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – MM. மாற்றுத் திறனாளிகளை மணந்துக் கொள்ளும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை–09. உதவித் தொகை–03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(து.தொ.கு 2235 02 101 MM 0930)

8. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ‘‘புது துணைப்பணி’’ குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தை முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்பட வேண்டும். இம்முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். மேலும், எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து இம்முன்பணம் பெற தேவையான செயற்குறிப்புகளை இவ்வாணையுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு அனுப்புமாறும் மற்றும் இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை (Supplementary Estimates) 2011–12ல் சேர்க்கும் பொருட்டு தேவையான கருத்துருக்களை உரிய தருணத்தில் நிதி (வ.செ.பொ.1) துறைக்கு தவறாமல் அனுப்புமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். நிதி(சந)/217/JS/11 , நாள் 27.6.11 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.175 (நூற்று எழுபத்து ஐந்து)ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந, வ.செ.பொது I/II)துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//